# சத்திய வேத பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு

(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)


> திறமையாளன் தனது திறமைகளைத் தனக்காகப் பயன்படுத்திக் கொள்வது கொஞ்சம். அவனது திறமைகளைத் தங்களுக்காக மற்றவர்கள் பயன்படுத்திக் கொள்ள ஏற்படுகிற வாய்ப்புத்தான் அதிகம்.
>
> —சுவாமி ஞானப்பிரகாசர்


96-ம் புத். | 1971-ம் ஆண்டு ஆடி மாதம் 24-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 26-ம் இல


# வத்திக்கான் உறவைச் சீனு நாடுகின்றதா?

அண்மையில் சீனு தேசத்தில் ஒரு மாற்றத்தை உலகம் கண்டுவருகின்றது. நம்ப முடியாத சம்பவங்கள் அங்கு நடைபெற்று வருகின்றன. அமெரிக்கதேச ஜனுதிபதி நிக்சன் அவர்களை சீனுவுக்கு விஜயம் செய்யுமாறு சீனு அன்பழைப்பு அனுப்புமென யார்தான் நினைத்திருக்கக் கூடும்? இம்மாற்றத்தைக் கண்டு உலகம் திகைத்து நிற்கின்றது. இதே காலத்தில், சீனு தேசம் வத்திக்கான் அரசாங்க உறவை நாடுகின்றதெனும் வதந்திகளும் உலாவுகின்றன. வத்திக்கான் அதிகாரிகள் திருச்சபையின் கொள்கைக்கு இது உகந்ததாயிருப்பினும், இப்போது உறவைப் பாதிக்கும் தடைகள் சீனு நீக்காது இருக்குமளவும் நிலைமையில் மாற்றம் இருக்க முடியாது என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கின்றனர். ஆகவே தூதுவர் நியமனநிலைமை முன்போலவே இருந்துவருமெனக் கூறப்படுகிறது.

## மீன்பிடித் தொழிலாளரின் அபிவிருத்தியில் விசாரணைப்பங்குக் குருமாரின் சிரத்தை

கொழும்பு அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த மீன்பிடித் தொழிலாளரின் விசாரணைப்பங்குக் குருமார் பலர் சென்றவாரம் கொழும்பு அதிமேற்றிராணியார் இல்லத்தில் ஒன்றுகூடித் தத்தம் பங்கின் தொழிலாளர் குறைகளை ஆராய்ந்தனர். இக் கூட்டத்துக்கு அதிமேற்றிராசன விக்கார் ஜெனறல் சுவாமியாராகிய அதி வணக்கத்துக்குரிய யே. டி. மெல் அடிகளார் தலைமைவகித்தார். திருச்சபை இதுகாலவரையும் இப் பிரிவுகளில் தொழிலாளரின் அபிவிருத்திக்காகச் செய்துவந்த தொண்டுகள் ஆராயப்பட்டன. அத் தொண்டுகளிலுள்ள குறைகளும் அவற்றை நீக்க முறைகளும் எடுத்துக் கூறப்பட்டன. கத்தோலிக்க தொழிலாளரின் அபிவிருத்திக்கு உழைப்பது திருச்சபையின் கொள்கையாயிருப்பதால், புதுக்கால முறைக்குத்தக எவ்வாறு குருமார் உதவிசெய்யலாமெனத் திட்டம் வகுக்கப்பட்டது.

## திருச்சபைக்குரிய சொத்துக்களைப் போலாந்து அரசாங்கம் திருப்பிக்கொடுக்கின்றது

போலாந்து தேச வடபகுதிகளிலும் மேற்குப் பகுதிகளிலும் சென்ற மகாயுத்தத்தின்முன் திருச்சபைக்குரிய நிலங்களாயிருந்த சொத்துக்களில் பல பகுதிகள் யுத்தத்தின்பின் கொமியூனிஸ்த அரசாங்க சொத்துக்களாய் பரிபாலிக்கப்பட்டு வந்தன. ஆனால், அண்மையில் பழைய பிரதமர் கொமுல்கோ பதவியிலிருந்து அகற்றப்பட்டதன் பின் திருச்சபைக்கும் அரசாங்கத்துக்குமிடையில் நட்புறவு படிப்படியாய் வளர்ந்து வந்திருக்கிறது. அதன் விளைவாகவே இப்போது போலாந்து அரசாங்கம் அச் சொத்துக்களைத் திருச்சபைக்கு மீளவும் கொடுத்துவிட ஏற்பாடுகள் செய்துவருகின்றது. இவ்வேற்பாட்டின் பயனுக சுமார் 4,700 தேவாலயங்களும், 2,200 மடிமனைகளும் திருச்சபைக்கு உரியனவாகின்றன.

## கருதினல் மின்சென்றியை தரிசித்தார் கருதினல் கோனிக்

ஹங்கேரி தேச கருதினல் மின்சென்றி அடிகளார் 1956ஆம் ஆண்டு தொடக்கமாக புடாப்பெஸ்ற் நகரிலுள்ள அமெரிக்க தூதராலயத்தில் வசித்துவருவது யாவரும் அறிந்தவிஷயமே. சென்றவாரம் அவரை அவுஸ்திரியதேச கருதினல் கோனிக் அடிகளார் அங்கு சென்று கண்டு திரும்பியிருக்கிருர். கோனிக் அடிகளாரின் விஜயத்தின் பயனுக கருதினல் மின்சென்றி அடிகளாரின் சிறைவாசம் அண்மையில் முடிவுபெறுமா என பலர் ஆவலுடன் விசாரித்துக்கொள்கின்றனர்.

## கன்னியாஸ்திரி தலைவர்

வத்திக்கானில் துறவினிகளின் ஸ்தாபனங்களைப் பரிபாலிக்கும் காரியாலய தலைவராக சங்கைக்குரிய சிஸ்டர் தடேயாமெகலி என்னும் அமெரிக்கதேச கன்னியாஸ்திரி நியமிக்கப்பட்டிருக்கிருர். இத்தகைய பிரதான பதவியில் இதுவரையும் பெண்பாலார் ஒருவரும் அமர்த்தப்படவில்லை. 2ஆம் வத்திக்கான் சங்கத்தின்போது ரோமாபுரியில் தற்கால உலகில் கன்னியாஸ்திரிகளின் நிலைமையைக் கூர்ந்து அவதானித்துவந்த துறவினிகள் குழுவினரின் ஒருவர் சிஸ்டர் மெகலி.

## தமிழைமட்டும் படித்தால் போதுமா?

"தமிழ்மாணவர்கள் உத்தியோக மொழியான சிங்களத்தையும், சர்வதேச மொழியான ஆங்கிலத்தையும் கற்கவேண்டும்; பன்மொழிப்புலவரான சுவாமி ஞானப்பிரகாசரைப் போற்றி ஏற்றும் நாம் பலமொழிகளைக் கற்பதில் என்ன தவறு உண்டு? தமிழ் மாணவர்கள் தமிழைமட்டும் படித்தால் போதுமா? தமிழ் மொழியைத் தமிழ் மாணவர்கள் ஆழமாக கற்க வேண்டும்; ஆனால், அதே நேரத்தில் உத்தியோகமொழியான சிங்களத்தையும், சர்வதேசமொழியாக விளங்கும் ஆங்கிலத்தையும் நிச்சயமாகக் கற்கவேண்டும்; இந்த இரண்டு மொழிகளும் தமிழ் மாணவர்களுக்கு உதவக்கூடியன" என்று திருகோணமலை புனித பிரான்சிஸ் சேவியர் பாடசாலையில் நடைபெற்ற தமிழ்த்தின விழாவில் திருகோணமலை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வி. சபாநாயகம் அவர்கள் பேசியுள்ளனர்.

# திருச்சபையின் புதிய அமைப்புச் சாசனம் 1975 அளவில் வெளிவரலாம்

திருச்சபையின் போதனைகள் அன்றிருந்ததுபோல் இன்றுமிருந்து வருவனவாயினும் பல நடைமுறைகள் காலாகதியில் மாற்றமடைந்து வந்திருப்பதை யாவரும் அறிவர். திருச்சபையின் பரிபாலனத்துக்கு உதவிசெய்யும் "கனன்லோ" சட்டங்களும் திருத்தியமைக்கப்பட்டு வந்திருக்கின்றன. இத் திருத்தங்கள் யாவற்றையும் அடக்கிய அமைப்புச் சாசனம் ஒன்று தயாராகிவருகின்றது. உலக சரித்திரத்திலேயே இத்தகைய அமைப்புச் சாசனம் முன்னொரு போதும் வெளிவந்ததில்லை. இவ்வமைப்புச் சட்டங்களை தயாரித்துவரும் குழுவினரின் பதில் காரியதரிசி வில்லியம் ஒங்கிளின் அடிகளார் இவ்வமைப்புச் சாசனத்தை 1975-ம் ஆண்டுக்குமுன் எதிர்பார்த்திருக்க வேண்டாமென அறிவித்திருக்கிருர். இவ்வருடம் கூடவிருக்கும் மேற்றிராணிமாரின் சினோட் இச்சாசனம் வெளிவருவதைத் துரிதப்படுத்தக் கூடுமென சிலர் எண்ணியிருந்தனர்.

## முதல்நன்மையின்முன் பாவசங்கீர்த்தனம் பாலர்களுக்கும் அவசியமா?

10-ம் பத்திநாத பாப்பரசர் சிறு பிள்ளைகளுக்கு முதல் நன்மை அளிக்கும் முறையை நிறுவினதன் பின் முதல் நன்மை பெறுமுன் இப்பாலர் பாவசங்கீர்த்தனத்தைச் செய்வது பாரம்பரிய வழக்கமாய் விட்டது. ஆனால், பாலர் குற்றமில்லாதவர்களாயிருப்பதால் இவர்கள் முதல் நன்மை பெறுமுன் பாவசங்கீர்த்தனம் செய்ய அவசியமில்லையென அண்மையில் சில பகுதிகளில் கருதப்பட்டு வந்தது. இந்த அபிப்பிராயத்திலுள்ள குறைபாட்டை வத்திக்கான் அதிகாரிகள் விளக்கி பாரம்பரிய வழக்கத்தைத் தழுவி முதல்நன்மைபெறுமுன் பிள்ளைகள் பாவசங்கீர்த்தனம் செய்வதுதான் தக்க முறையெனக் கூறியிருக்கின்றனர். சிறு பிள்ளைகளாயினும் குற்றமில்லாதவர் எவருமில்லை. அக்குற்றங்களைத் திருத்த பாவசங்கீர்த்தனம் உதவியாயிருப்பதும், தேவஅருளைப்பெற வழியாயிருப்பதுமே அதற்கு நியாயங்களாம்.

## அரசாங்கத்துக்குப் பங்கில்லை

வத்திக்கானுக்கும் ஸ்பெயின் தேசத்துக்கும் இடையிலுள்ள இக்கால உடன்படிக்கையின்படி மேற்றிராணிமார் நியமனத்தில் அரசாங்கத்துக்கும் ஓரளவு பங்கு இருக்கின்றது. ஆனால் இனிமேல் மேற்றிராணிமார் நியமனத்தில் எள்ளளவும் அரசாங்கத்துக்கு இடமில்லாதிருக்கவேண்டுமென 115 மறைநூல் வல்லுனர் கைச்சாத்திட்ட அறிக்கை மட்றிட் நகரத்தில் பிரசுரஞ் செய்யப்பட்டிருக்கிறது.

## வர்த்தகர்கள் வரவேற்கின்றனர்

வார இறுதி விடுமுறை நாட்களை, முன்போலச் சர்வதேசவார சனி, ஞாயிறுக்கு மாற்றஞ் செய்ய அரசாங்கம் முன்வந்திருப்பதை இலங்கையிலுள்ள வர்த்தக ஸ்தாபனங்கள் வரவேற்றுத் திருப்தி தெரிவித்துள்ளன. போயா விடுமுறைத்திட்டம் இலங்கையின் ஏற்றுமதி வர்த்தகத்துக்கு முற்றும் பிரதிகூலமானது; ஏனெனில், உலகின் ஏனைய பகுதிகள் வர்த்தகத்திற்குத் திறந்திருக்கையில் இலங்கை எந்தவிதமான வர்த்தகமும் நடத்துவதில்லை; அதனால் பிறநாடுகளிலே இலங்கையின் உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்கிறவர்கள் போயாதினங்களில் அவைகளுக்கு ஆடர் செய்ய முடியாதவர்களாய் இருக்கிறார்களென அவைகள் தெரிவித்திருக்கின்றன.

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண் "

# காலத்துக்கேற்ற கோலம்

## மாற்றமும் மறுமலர்ச்சியும்

(சென்றவாரத் தொடர்ச்சி)

அதை எத்தனையோ கிறிஸ்தவர்கள் வீட்டில் காணலாம். அதை எத்தனையோ கிறிஸ்தவர்கள் ஆர்வமுடன் படிக்கிறார்கள். கண்ணைக் கவர்ந்து மதியை மயக்கும் தவறான கருத்துக்களையும் ஆவேஷ உணர்ச்சிகளையும் ஊட்டும் இலக்கியங்களைப் படித்துப் பாழடைந்துபோகும் இளைஞர்களின் எண்ணிக்கை எவ்வளவு? அவைகளை விட்டு வாழ்வைச் சீர்ப்படுத்தி சமுதாயத்தை உண்மை நெறியிலும், ஒழுக்கத்திலும், கடவுள் பக்தியிலும் இட்டுச் செல்ல வழி காட்டும் புதிய ஏற்பாட்டை வாசித்துப் பயனடைந்தால் என்ன ?

(— அருட்திரு யா. நிருச்செல்வம் —)

மறையை வளர்க்கச் சிறந்த இடம் வீடன்றி வேறெது? குடும்பவழிபாட்டு நேரத்தில தினமும் புதிய ஏற்பாட்டின் பகுதி ஒன்றை வாசித்து கிறிஸ்துவின் வாக்கியங்களைக் கேட்டுத் தியானிப்பது நாம் மேற்கொள்ளவேண்டிய முக்கிய கடமை; அஞ்ஞானமும் அறிவீனமும் வளர்ந்து மதக் கோட்பாடுகளுக்கு முற்றுப் புள்ளியிடும் காலத்தில், பாடசாலைகள், கல்விக்கூடங்கள் வயிற்றைமட்டும் வளர்க்க வழி காட்டும் இவ்யுகத்தில் ஞான அறிவை வளர்க்க வழி வேறெது? பிள்ளைகளைப் பெற்று அவர்களுக்கு ஞான அறிவையும் கல்வியறிவையும் ஊட்டும் பொறுப்பு முழுவதையும் பாடசாலையாசிரியர்களிலும் குருக்கள் கன்னியர்களிலும் சுமத்திவிடும் காலம் மாறிவிட்டது. காலத்துக்கேற்ப வாழ்க்கை முறைகளையும் மாற்றியமைத்தல் இன்றியமையாதது. பெற்றோர்களே பிள்ளைகளுக்கு முதலில் ஞான அறிவையும் ஒழுக்க வழிகளையும் வீட்டில் புகட்டவேண்டும். தாய்ப்பாலுடன் குழந்தை மதம் என்னும் அமுதத்தையும் தாய் தந்தையிடமிருந்தே பருகவேண்டும். மதம் மக்கள் உள்ளங்களை மாற்றியமைக்க வேண்டுமென்றால் அது முதல் வீட்டில் வேரூன்றி வளரவேண்டும்.

கிறிஸ்துவோடு ஒன்றித்து அவரின் அடிச்சுவடுகளில் நடப்பதே கிறிஸ்தவ வாழ்வு. ஞாயிற்றுக்கிழமை பூசை, தேவதிரவிய அனுமானங்கள், கோவிற் திருநாட்கள் யாவும் இக்கிறிஸ்தவ வாழ்வை செம்மையாக வாழ உதவி புரிகின்றனவேயன்றி, அவைகளை அனுசரிப்பதுதான் கிறிஸ்தவ வாழ்க்கையன்று. ஞாயிற்றுக்கிழமை பூசையில்லையென்று நாம் கடவுளை வழிபடாமலிருக்க முடியுமா? அதுவே நாம் செய்யும் தவறு. கிறிஸ்தவர்கள் என்ற பங்கில் நாம் ஒரே சமுதாயமாக நம்மைப் படைத்த இறைவனை வழிபடவேண்டும். இந்த அடிப்படையான கடமையை உணராமல், நாம் பூசையில்லாவிட்டால் கடவுளையே வழிபடாமலிருக்கிறோம். மேலும் பாவசங்கீர்த்தனம் செய்ய வழியில்லையென்று, செய்த பாவத்துக்கு மனஸ்தாபப்படாமலிருப்பதும் தவறு. தேவநற்கருணை பெறமுடியவில்லையென்று, கிறிஸ்து நம் உள்ளங்களிலில்லை என்று கருதுவதும் தப்பு. ஆகவே, மேற்கூறிய வெளிச்சடங்குகள் ஆராதனைகள் இல்லாத பொழுதும் நாம் கிறிஸ்துவோடு ஒன்றித்த வாழ்வின் ஒவ்வொரு நிமிடமும் கிறிஸ்தவர்களாக வாழக் கற்றுக்கொள்ளல் அவசியம். சுருங்கச் சொல்லின் நாம் என்றும் கடவுளின் பிரசன்னத்தில்வாழ்ந்து அவரை நம் வாழ்க்கையில் அனுபவிக்கவேண்டும்.

அல்லாவிடில் மேற்கத்தைய நாடுகளுக்கு வந்த கதிதான் நம்மையும் பாதிக்கும். கி.பி. ஏறக்குறைய 6-ம் நூற்றாண்டிலிருந்து 18-ம் நூற்றாண்டு வரை கிறிஸ்தவமயமாகக் காட்சியளித்த ஐரோப்பிய நாடுகள் இன்று மறையே வேண்டாமென்று முரசு கொட்டி நிற்கின்றன. ஆற்றைக் கடக்கும் மட்டும் வள்ளம் கடந்தபின் அதை வேண்டாமென்று காலால் தள்ளிவிடுவதுபோல் நாகரீகத்துக்கும் முன்னேற்றத்துக்கும் வழி வகுத்த கிறிஸ்தவ மதத்தை தேவையில்லையென தள்ளிவைத்துவிட்டன. ஞானஸ்ஞானம் பெறுவதிலும் வெளிச்சடங்குகளை அனுசரிப்பதிலும் மாபெரும் கோவில்களை கட்டியெழுப்புவதிலும் கிறிஸ்தவ வாழ்வு பெரும்பாலும் தங்கியிருந்தது. ஆயினும் கிறிஸ்தவமறை அவர்கள் வாழ்வை அதிகம் மாற்றியமைக்கவில்லை. ஏன் மதகுருக்களும் தலைவர்களும் கிறிஸ்தவ மதத்தைத் தெளிவாக புரிந்துகொள்ளாது அதை அரசியலில் பெரும் பதவி வகுக்க ஒரு வழியாகக் கைக்கொண்டனர். அதன் விளைவு இப்பொழுது கண்கூடாகக் காணக் கிடக்கின்றது. வானளாவும் சரித்திரப் புகழ்பெற்ற சிற்பக் கலையில் சிறந்து விளங்குகின்ற கோவில்கள் இன்று ஆண்டவனை வழிபடுவோரின்றி தலைகவிழ்ந்து நிற்கின்றன.

கிறிஸ்தவமறை எம் வாழ்வை மாற்றியமைக்காவிட்டால் மேற்கத்தேய நாடுகளின் நிலை நம் நாட்டையும் பாதிக்கும் என்பதில் ஐயமில்லை. கோவில்களைக் கட்டி எழுப்புவதைவிட எங்கள் உள்ளங்களை இறைவன் உறையும் ஆலயமாக்குவது உத்தமம். கிறிஸ்தவ அன்பும் நீதியும் சகோதரத்துவமும் பொலிந்து விளங்கும் குடும்பங்களையும், சமுதாயங்களையும் உருவாக்குவது எமது முதற் கடமை. அப்போது கிறிஸ்தவ மதத்திற்கு எதிராக சூறாவழி போன்று எந்த எதிர்ப்பும் போராட்டமும் எழட்டும். கிறிஸ்தவமதம் மக்களிடையே ஆழமாக வேரூன்றியிருந்தால் அதை யாராலும் அசைத்தெறிய முடியாது. அது, கிறிஸ்து மொழிந்ததுபோல் கற்பாறையின்மேல் கட்டப்பட்ட வீடுபோலிருக்கும். ஆனால் கிறிஸ்தவமதம் வெளிச் சடங்குகள் ஆராதனைகளோடு மட்டும் நின்றுவிட்டால் அது மணலின்மேல் கட்டப்பட்ட வீட்டுக்கொப்பாகும். பெரும் மழையும் காற்றுகளும் அடிக்கவே, எதிர்க்கப் பலமின்றி விழுந்து மடியும், மத். 7 : 24—27. ஆகவே இதிலிருந்து கிறிஸ்துவை மையமாகக்கொண்டு கிறிஸ்து என்னும் கற்பாறையில், எமது ஞான வாழ்வைக் கட்டியெழுப்புவது எவ்வளவு அவசியமென்று கூறத்தேவையில்லை.

# இடியின் மகனார்

## சந்தியாகப்பரின் புனிதவருடம்

ஆடிமாதம் 25ஆம் திகதி ஒரு ஞாயிற்றுக்கிழமை வருமானல், அந்த வருடம் ஸ்பானியதேச சந்தியாகோ டே கொம்பொஸ்தெலா நகருக்கு ஒரு புனித வருடமாகும. சந்தியாகோ என்பது அப்போஸ்தலரான சந்தியாகப்பரின் நாமத்திலிருந்து பிறந்தது; கொம்பொஸ்தெலா என்பது "நட்சத்திரகளம்" எனும் அர்த்தம் கொண்டது; இந்தப் புனிதநகரம் ஸ்பானிய தேசத்தின் வடமேல் திசையில் உள்ளது.

சந்தியாகப்பரைப்பற்றி அறியப்பட்டுள்ள சம்பவங்களில் மிகப்பெரும் பகுதியைச் சுவிசேஷ நற்செய்திகளும், அப்போஸ்தலர் திருப்பணிகளும் எடுத்துக்கூறுகின்றன. இவர் கலிலேயாக் கடலேரியின் கரையில் வசித்திருந்த ஒரு மீன்பிடிகாரரான செபதேயு–மரியசலோமையின் புதல்வர்கள் இருவரிலும் மூத்தவர். கிறிஸ்துநாதரால் அழைக்கப்பட்ட பொழுது, இவரும், இவர் சகோதரரான அருளப்பரும் மனிதர்களைப் பிடிக்கிறவர்கள் ஆகும்படியாய்த் தங்கள் வலைகளையும் கைவிட்டு அவரைப் பின்சென்றார்கள். இவர்கள் இருவரும் கிறிஸ்துநாதராலேயே "இடியின்மக்கள்" என்று பதில் நாமம் சூட்டப்பட்டார்கள்.

இவர்கள் இருவரும் அப்போஸ்தலரான இராயப்பருடன் கிறிஸ்துநாதரின் நம்பிக்கைக்குப் பாத்திரவாளராய், அவருடைய இரகசியத்தைக் காப்பாற்றுவோராய், அவரால் ஓர் உயர்ந்த மலைக்கு ஏகாந்தமாய் அழைத்துச் செல்லப்பட்டு அங்கே அவர் மறுரூபமானபோது அவரோடு தங்கியிருந்தார்கள். பின்பு அவர்கள் மலையிலிருந்து இறங்குகையில் அவர் இவர்களை நோக்கி: "மனுமகன் மரித்தோரினின்று உயிர்த்தெழுந்திருக்கும் வரையில் நீங்கள் இந்தக்காட்சியை ஒருவருக்கும் சொல்லாதேயுங்கள்" என்று கட்டளையிட்டார்.

ஸ்பானிய பாரம்பரியம் கூறுகிறபடி, சந்தியாகப்பர் சமேரியாவில் முந்தச் சுவிசேஷம்போதித்தார். அதன் மேல் ஸ்பானிய தேசத்துக்குப் போயினர். ஸ்பெயினிலே இவரின் வேதபோதக பிரயாணங்கள்பற்றிய பரம்பரை வரலாற்றை எடுத்துக் கூறும், "தங்கநூல்" அநேக சம்பவங்களை அடக்கியிருக்கிறது. அவற்றிலே இவர் சறகோசாநகரில் "தூண்மாதா" பெயரால் ஓர் ஆலயத்தைக் கட்டினர் என்பதும் ஒன்று.

— "ஞானம்" —

சந்தியாகப்பர் ஜெருசலேம் நகரில் யூதர்களால் வேதசாட்சியாகக் கொலையுண்டார். அவருடைய சீடர்கள் அவரின்புனித உடலை ஜொம்பா நகர் கொண்டு செல்லவே, அங்கு ஒரு சம்மனசானவர் அற்புதமாக வழிகாட்டி நிற்க, அதைக் கப்பல் ஒன்றில் ஏற்றிக்கொண்டு ஸ்பானிய தேசம் போய்ச் சேர்ந்தார்கள். அப்பொழுது அந்த நாட்டினை ஆட்சிசெய்த லூபா என்ற அஞ்ஞான அரசியின் ஆணைப்படியே, அப்புனித உடலை ஒரு வண்டியில் ஏற்றினார்கள். முரட்டு எருதுகளை அதில் பூட்டினார்கள். கட்டுக்கடங்காத அந்த முரட்டு எருதுகள் வண்டியை இழுத்துப்போய் எங்கு தங்கியதோ அந்த இடத்தில் வண்டியை நிற்பாட்டினர்கள். அவைகள் தரித்து நின்ற இடம் அரசியின் மாளிகைப்புறமே. அவளும் இந்த அதிசயத்தைக்கண்டு மனந்திரும்பி வேதவிசுவாசியானாள். புனித உடலை அடக்கம் செய்வதற்கான நிலத்தை அங்கே வழங்கினாள். அடக்கஞ் செய்த இடத்திற்கு மேலாகச் சமாதிமாடம் ஒன்றையும் கட்டுவித்தாள்.

சந்தியாகோ தெ கொம்பொஸ்தெலா நகரினதும், அவர் பேரால் அங்கு எழிலுற்று விளங்கும் ஆசனக் கோவிலினதும் ஆரம்ப வரலாறு இதுவாகும். விசிக்கோதியரும், முகமதியரும் காலந்தோறும் இந்நகரிலே படையெடுத்திருந்தும் பல நூற்றாண்டுகளாக அவரின் கல்லறை யாதொரு பங்கமுமின்றி அமைதியாயும், காலகதியில் அறியப்படாததாயும் இருந்து வரலாயிற்று.

கொம்பொஸ்தெலா (நட்சத்திரகளம்)எனும் நாமம் இந்நகருக்கு எவ்வாறு வந்தது? அநேக வருடங்களுக்குப்பின் வனவாசி ஒருவர் அதற்கு மேலாகப் பிரகாசித்த நட்சத்திரம் ஒன்றைக் கண்டு அதனைத் தொடர்ந்து சென்று அவரின் புனித உடலைக் கண்டுபிடித்தார். இது செய்தி அக்காலத்திலே அகில முழுவதிலும் பெரும் பரபரப்பை உண்டுபண்ணியது. அது முதல் கொம்பொஸ்தெலா நகரை நோக்கி யாத்திரிகர்கள் சாரியத் தொடங்கினார்கள். ஸ்பானியமக்கள் முகமதியரை எதிர்த்து நடத்திய யுத்தங்களிலெல்லாம் சந்தியாகோ என்பதே

(மறுபக்கம் பார்க்கவும்)

## அருள் முனியாம் எங்கள் யாகப்பரே

—(இளவாலை இளவல்)—

[ எழுந்தார் நாதன் சாவை வென்றே (எ. மெ.) ]

**பல்லவி**

புகழ்வோம் எங்கள் புனிதரை நாமே
மகிழ்வோம் அவரின் மகிமையில் என்றும்

**சரணங்கள்**

1. செபதேயு சலோமை ஜெய புத்திரனே
செகமதில் நல்வாழ் வளிப்பீர் —புகழ்வோம்

2. யேசுவின் பிரிய சீடன் நீரே
நேசமாய் எம்மைப் பாதுகாப்பீர் —புகழ்வோம்

3. சோதர னுடனே யேசுவைப் பின்சென்று
வேதனை பலவும் அடைந்தீரே —புகழ்வோம்

4. யேசுவின் அன்புக்காய் அனைத்தையும் துறந்து
நேசமாய்ப் பணிகள் புரிந்தீரே —புகழ்வோம்

5. அன்னையை அழைத்து அமலனை நாடி
நல்வரம் கேட்டவர் நீரன்றோ —புகழ்வோம்

6. சிரமது ஈந்து வேதசாட் சியான
அருள் முனியாம் எங்கள் யாகப்பரே —புகழ்வோம்

7. புனிதராய் முதலில் மரித்த அப்போஸ்தலர்
மகிமையைப் பெற்றவர் நீர்தானே —புகழ்வோம்

8. மூவரில் ஒருவராய் முதன்மை பெற்றீரே
முடிவில்லா இன்பம் நீர் அடைந்தீர் —புகழ்வோம்

# கல்வாரி மத்தியில் ஆருயிர் அன்பர்

(சென்றவாரத் தொடர்ச்சி)

முழுமதியின் அழகைப் பழிக்கும் முகத்தினில் கருணை கொண்டு, பூவிழிகளில் அன்பைத்தேக்கி, மலர்க்கரங்களில் பாசத்தினை வடித்தெடுத்து, மக்களை அன்புடன் அரவணைக்கும் அன்னையின் அன்புள்ளம ஒரு தங்கச்சுரங்கம். அவளது அன்பில் திளைத்து, இறைவனின் திருவடிகளை நினைத்து, ஆசைகளை அறுத்து, பொய்யான சிற்றின்பங்களை வெறுத்து, அன்னையை மறுத்துக்கூறி மந்தபுத்தியால் சொந்த புத்தியை இழந்த நம் சந்ததியினரை அன்பால் அணைத்து, நம் வாழ்வினை நடாத்த அன்னையிடம் வேண்டுவோம். நிச்சயம் அருள்சுரக்கும். அவளது தாய்மை நெஞ்சம் நமக்காக இறைவனிடம் கெஞ்சி மன்றாடும். இத்தன்மைய அன்னையைக் கல்வாரிமலை மத்தியில் நமக்களித்த கிறிஸ்து யேசுவின் பேரன்புதான் என்னே!

கல்வாரிமலையிலே கள்வர் நடுவிலே உலகை உய்விக்க வந்த உத்தமரின் உயிர் ஊசலாடும் வேளையிலே மடமைக் கண்ணைத்திறந்து வலதுபக்கக்கள்ளன், "இறைவா! உமது இராச்சியத்தின் ஆட்சிக்குப் போகும் பொழுது என்னையும் எண்ணியருளும்" என்று விண்ணப்பமொன்று விடுக்கின்றான். அன்பினால் மன்னுயிர்கள் இன்புறச் செய்த மாமன்னர், புண்ணான நெஞ்சங்களில் புத்துயிரைவார்த்து வளர்த்த புண்ணியசீலர், கருணையிலே தந்தையெனவும் தாயெனவும் இலங்கிய காருண்யவீரர் பாருலகை மீட்கப் பாரத்திலிருந்து பறந்துவந்த பரமன், "இன்றுதானே விண்ணகத்தில் என்னோடு இருப்பாயென்று" அன்பு ததும்ப அழைப்பு விடுக்கின்றார். "அன்புக்குமுண்டோ அடைக்குந்தாழ்." என்னே! இறைமகன் கிறீஸ்துயேசுவின் நிறை அன்பு!

ஆசிரியர்:
ஜி.ச.மிராண்டா, வங்காலை

கள்ளனையும் தள்ளாது நல்லுரை நவின்ற கிறீஸ்துயேசு "நான் பாவிகளையே தேடிவந்தேன்" என்ற தெவிட்டாத தெள்ளமிழ்தத் தேன்மொழியால் அன்பினைச் சொரிந்து, பாவக்கறையால் நிறைந்துள்ள நம்மையும் தாம் சொரிந்த இரத்தத்தால்கழுவிக் கறைபோக்கி நிறைகாண கல்வாரிமலைக்கு அன்புடன் அழைக்கின்றார். கிறீஸ்துயேசு கள்ளனுடைய பாவத்தை மட்டுமல்ல நம் எல்லோருடைய பாவத்தையும் சிலுவையில் சுமந்து எல்லோரும் இம்மண்ணுலக வாழ்வின் பாவத்தினின்று விடுதலையடைந்து விண்ணுலகவாழ்வில் அன்பர்கள் சங்கத்தை அடையும்படியாக கால்களிலும், கரங்களிலும் ஆணிகள் ஊடுருவ, முள்முடி தரித்தவராய் இரத்தம் வடிய, மரணத்தின் கொடுமையைக் கல்வாரிமலையிலே சிலுவையில் தொங்கிச் சகித்துக் கொண்டு அன்பின் அழைப்பை விடுக்கின்றார். என்னே! கிறீஸ்து யேசுவின் அன்பு,

மாலைக் கதிரவனின் மயக்கும் செம்பொற்சூடு கோடிட்டு நின்று குடாக்கடலில் ஒளிக்கதவடைக்கத் துடித்து நிற்கும் நேரம். வானத்தை முட்டியும் தொட்டும் நிற்கும் மலைச்சிகரங்கள் தொடர்பற்றும் தொடர்பு கொண்டும் அங்கொன்றும் இங்கொன்றுமாய்ச் சிதறிநின்று சிரிக்கும் சிறு சிறு குன்றுகள். அவற்றின் சரிவிலேபசிய பள்ளத்தாக்குகள். அங்கே பாய் விரித்துப் பச்சைப்பசேலென்று இலைவிரித்துப் பார்ப்போர் கண்களின் நிலைபிரித்து ஓங்கி வளர்ந்து ஒய்யாரமாக வரிசை கொடுத்து நிற்கும் சவுக்குச் செடிகள் கிறீஸ்து யேசுவைச் சதிசெய்ய மதியாலோசனை செய்த மதகுருக்களும் அவர் மரிப்பதைக் காணவேண்டுமென்று ஆவலோடு காத்துக்கொண்டிருந்த மாபெரும் மக்கள் கூட்டமும் மாநிழலிலே மகிழ்ச்சியுடன் கூடிநிற்கின்றனர்.

கிறீஸ்துயேசு சொல்லொண்ணு வேதனையுடன் சுற்றிலுமிருந்த மக்களின் கவனத்தைக் கவர்ந்தவராய்ச் சிலுவையிலே தொங்கிக் கொண்டிருக்கிறார். பெற்ற அன்னையும் உற்ற உறவினர்களும் கண்ணீர் வடித்துக் கலங்கி சிலுவையினருகே சிரந்தாழ்த்தி நிற்கும் வேளையிலே "தாகமாயிருக்கிறேன்" என்று கூவி அழுகிறார். "சீவிய ஊற்றின் ஊறணிநானே", "எக்காலமும் தவியாத தண்ணீர் என்கையில் உண்டு" என்று அன்பொழுக அகிலமறிய பலமுறைபகன்ற பரமன் "தாகமாயிருக்கிறேன்" என்று கூவி அழுகின்றார்.

அன்றும் இன்றும் என்றும் மாறாத இறைவனுக்குத் தாகமேது? ஆம் தாகமுண்டு. பாவத்தால் பரிதவிக்கும் பாவிகளுக்காக பாடுபட்டது போதாதென்று இறைமகன் இன்னும் பாடுபடவேண்டுமென்றதாகமே யல்லாது வேறேதாகமல்ல. கிறீஸ்துயேசு பாவிகளாம் நம்மேல்கொண்டுள்ள அன்புக்கும் அளவுண்டோ?

இம்மண்ணுலகில் மானிடராய் மதிக்கப்பெற்ற ஒவ்வொருவருடைய பாவப்பாரத்தையும் பரிகரிக்கும்படியாக கிறீஸ்து யேசுவுடைய முகத்தினின்றும் கால்கரங்களினின்றும் இரத்தம் சொட்டுச் சொட்டாகக் கொட்டிக் கொண்டிருக்கின்றது. இன்னும் சிறிது நேரத்தில் இறைவனின் இன்ப இணையடிகளுக்கு இறைமக்கள் நமக்காக இரந்து பேச பிரதான ஆசாரியனைப் பிரவேசிப்பார். அதற்காகவே அழுக்கற்ற ஆட்டுக்குட்டியைப்போல் பட்டப்பகலில் வெட்டவெளியில் கல்வாரி மத்தியில் பலியாகத்தம்மைப் பலியிடப் போகிறார். சிறிது நேரத்திற்கு முன்புதான் "இது உங்களுக்காக ஊற்றப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமென்று" சொல்லிக் கொண்டிருந்தார்.

கல்வாரிமலையிலே எல்லையில்லாவகையிலே கிறிஸ்து யேசு சகித்துக்கொண்டிருந்த சஞ்சலத்திலிருந்து அவரை அகற்ற ஆயிரக்கணக்கான தேவதூதர் தேடிவந்துசூழ்ந்துநிற்பதை அவர் அறிந்திருந்தும் இறங்கிவர இயலாதவராய் இருந்தார். ஏனெனில் இறைவனின் சித்தத்தை நிறைவேற்ற நம் எல்லோர் பாவத்தையும் சுமந்து தாங்கிக் கொண்டிருந்தார். கிறிஸ்து யேசு நாம் எல்லோரும் மண்ணுலக வாழ்வின் பாவத்தினின்றும் விடுபட்டு இறைவனின் இன்பமயமான இல்லத்தை அடையும்படியாக மரணத்தின் கொடுமையைச் சிலுவையிலே சகித்துக்கொண்டிருந்தார்.

கிறிஸ்து யேசுவின் அளவில்லாத அன்புதான் என்னே!

## இடியின் மகு...

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

அவர்களின் வெற்றிக்கோஷமாய் இருந்தது.

புனிதயாகப்பரின் கல்லறையில் புதுமைக்குமேல் புதுமையாய் அநேக புதுமைகள் நிகழ்ந்தன. அதனால் அங்கு சென்ற யாத்திரிகர்களின் தொகை வெகுவாக அதிகரிக்கவே, உலகின் மாபெரும் யாத்திரைத் தலங்களின் மற்றொரு மத்திய தானமாய் ஜெருசலேமுடனும், ரோமாபுரியுடனும் கொம்பொஸ்தெலா நகரும் இணைந்து கொண்டது. இரண்டாவது கலிக்ஸ்துஸ் பாப்பாணவர் (1130) கத்தோலிக்க உலகின் மூன்றாவது புனித நகராக அதனைப் பிரகடனஞ் செய்தார். அநேக பலன்களையும் அதற்கு வழங்கினார். இப்புனித நகர் செல்வாருக்கு அங்கு 11 ஆம் நூற்றாண்டிலே கட்டியெழுப்பப்பட்ட புராதன ஆசனக்கோவிலும், அதனைச் சூழவுள்ள வில்மாட உலாச்சாலைகள் போலும் சிறிய வீதிகளும் அதிசுகவர்ச்சி அளிப்பனவாகும். ஆலயத்தில் நிறுவப்பட்டுள்ள கிறிஸ்துநாதரின் பாரிய திருச்சுரூபமானது, அதன் உட்புற முழுவதையும் ஆட்சி செய்வதுபோல் காட்சியளிக்கின்றது. அதன் பாதங்களிலே அப்போஸ்தலரான சந்தியாகப்பர் தமது ஊன்றுகோலைத் தாங்கியபடி ஓர் உயிரோவியம் போல் காணப்படுகின்றார். ஆலயத்தின் நிலவறையிலே அவரின் புனித அஸ்திகள் வெண்பொன் சிமிழ் ஒன்றிலே இருந்து வருகின்றன. அங்கு புனிதவருடம் சென்ற மார்கழி 31 ஆம் திகதியன்று 'திருச்சுபாட' திறப்பு விழாவுடன் ஆரம்பமாயிற்று.

---

எம்மிடம் திருமண ஒப்பந்தம் செய்யவிருக்கும் ஆண் பெண் பலர் இருக்கிறார்கள். கிறீஸ்தவ சமயத்தின் எச்சாதியத்தவரும் தொடர்புகொள்க. இச்சமூகப்பிரச்சினை இலேசாகத் தீர்த்துவைக்கப்படும்.

வித்துவான்
எஸ், யோசேப்பு,
புதுறேட், கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

---

## சேவைநலம் பாராட்டு விழா

38 வருடங்களாகத் தொடர்ந்து ஆசிரியசேவையில் ஈடுபட்டிருந்த திருமதி திரேசம்மா பேர்க்மன்ஸ் அண்மையில் தனது ஆசிரிய சேவையிலிருந்து இளைப்பாறிக் கொண்டார். குருநகர் பெண்கள் பாடசாலையில் 5 வருடங்களாகவும், யாழ். திருக்குடும்பக் கன்னியர் மகாவித்தியாலயத்தில் 33 வருடங்களாகவும் கடமையாற்றிய இவர் பொதுநல வாழ்விலும், சமூகத் துறையிலும் மற்றவர்களுக்கு முன்னோடியாக வாழ்ந்து காட்டினர்.

இவர் சத்தியவேத பாதுகாவலன் பத்திரிகை முன்னாள் ஆசிரியர் திரு. வ. ஞானப்பிரகாசம் அவர்களின் மருமகளும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி யாழ். கிளைக் காரியாலயத்தில் பிரதம லிகிதராகக் கடமையாற்றும் திரு. பேர்க்மன்ஸ் அவர்களின் பாரியாருமாவர். இவருக்கு அண்மையில் யாழ். திருக்குடும்ப கன்னியர் மகாவித்தியாலய ஆசிரியர்களால் ஒரு பிரியாவிடை நடத்தப்பட்டபோது, தலைமை ஆசிரியை சங். மதர் மேரி விக்ரரின், திருமதி நீக்கிலாஸ், திருமதி வேலுப்பிள்ளை, திருமதி கல்லைதயா ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

ஈற்றில் பள்ளிக்கூட மாணவிகளால் சங்கீதம், நடனங்கள் நடத்தப்பெற்று, அவ்வாசிரியைகளால் ஒரு தங்கச்சங்கிலியும் அன்பளிப்பாக வழங்கப்பட்டு விருந்து வைபவத்துடன் விழா இனிது முடிவெய்தியது.

---

திரு. G. மரியாம்பிள்ளை
அவர்களின்

## தேகவியோகம்

கொட்டகப்புல வாசரும், யாழ்ப்பாணம் மாட்டின் வீதியில் நெடுங்காலமாக வாழ்ந்து வந்தவரும், நமது அச்சகத்திலே முப்பத்தைந்து ஆண்டுகளுக்குமேல் கடமையாற்றிவந்து இளைப்பாறியவருமான திரு. G. மரியாம்பிள்ளை அவர்கள் விருத்தாப்பிய நோய் கண்டிருந்து சென்ற 14ஆம் திகதி புதன் கிழமை கல்கிசையில் தமது வாசஸ்தலத்தில் காலஞ்செல்லலாயினு ரென்னும் துயர செய்தியை அறியவந்து பெரிதும் மனம்வருந்தலானேம்.

அன்னாரை இழந்து துயருறும் இனசனர், அன்பர்களோடு நாமும் அனுதாபப்படுகிறோம். அவரது ஆன்மா சாந்தி அடைவதாக.

---

✠

## 4ஆம் வருட மரண ஞாபகம்

### திரு. தோமஸ் ஜே. சௌந்தரநாயகம்

தோற்றம்: 7-12-1906. மறைவு: 26-7-1967

"சீவியத்தில் நேசித்தோம் மரணத்தில் மறவோம்."

எம் வாழ்வின் வழிகாட்டியாக; குடும்ப ஜோதியாக; அறத்தின் துணையாக எம்மிடையே இருந்து, அன்பாலும் பண்பாலும் எம்மை வழிநடத்தி, எம் அனைவரையும் மீளாத் துயரத்தில் ஆழ்த்தி எம்மைவிட்டுப் பிரிந்த திரு. தோமஸ் சௌந்தரநாயகம் அவர்களின் நான்காவது மறைவுதின ஆண்டு இம்மாதம் 26ஆந் திகதியாகும். அன்று காலை 6 மணிக்கு அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக அடைக்கலநாயகி ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இதனைக் காண்னும் அனைவரும் அவரின் ஆத்ம சாந்திக்காக மன்றாடும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

இங்ஙனம்,
அவரின் நேசமனைவி, பிரிய பிள்ளைகள், சகோதரர்.
79, பெரியதெரு,
யாழ்ப்பாணம்.

---

## மன்னாரில் திருமறைக் கருத்தரங்கு

மன்னார் மாவட்ட கத்தோலிக்கமக்கள் ஒன்றுசேர்ந்த திருமறைக் கருத்தரங்கு மன்னார் திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் யாழ்ப்பாணக் கத்தோலிக்க திருமறைக் கல்வி ஆலோசகர் வண. பிதா G. T. பாலசுந்தரம் அவர்களின் தலைமையில் ஆடித் திங்கள் ஏழாம் நாள் நடைபெற்றது.

விவிலிய வழிபாட்டுடன் கருத்தரங்கு ஆரம்பமானது. ஏழு குருப்பிரசாதிகளும் இருபத்தைந்துக்கு மேற்பட்ட கன்னியரும், பெற்றோரும், ஆசிரியர்களும், வாலிபரும், யுவதிகளும் உட்பட இருநூற்றுக்கு மேற்பட்டோர் இதில் பங்குபற்றினர். தலைவர் அவர்கள் அங்கு சமுகமளித்த அனைவருக்கும் நல்வரவு கூறினார்.

தலைவர் தமது உரையிலே அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றபின் இதுவரை காலமும் பாடசாலைகளிடம் இருந்து பெற்ற மறைக் கல்வியை தொடர்ந்தும் திருப்திகரமாகப் பெறலாம் என்று இருப்பது முடியாதுதொன்று.

இத்தகைய சூழ்நிலையில் தமது பிள்ளைகளுக்குத் திருமறைக் கல்வியைத் திருப்திகரமான முறையில் அளிக்க முடியாது. எனவே இப்பொறுப்பைப் பெற்றோரிடமே பொறுப்பிக்கவேண்டும். ஆனல் பெற்றோர் எல்லோரும் தம் மக்கட்குத் திருமறைக் கல்வியைக் கற்பிக்கக்கூடிய முறையில் இருக்கிறார்களா? பொதுவாக இல்லையென்றே கூறவேண்டும். எனவே அவர்கட்கு தகுந்த சமயக்கல்விப் பயிற்சி அளிக்கப்படவேண்டும் என்று கூறினர்.

## பூசை வழிகாட்டி
### ஆடி — 1971

25. ஞாயிறு — ஆண்டின் 17–ம் ஞாயிறு [ப]
1ஆம் வாசகம்: ஆதி. 18:20—32
2ஆம் வாசகம்: கொலோ. 2: 12—14
சுவிசேஷம்: லூக். 11: 1—13

26. திங்கள் — புனித அன்னம்மாள் [வெ]
வாசகம்: சர்வ. 44: 1, 10—15
சுவிசேஷம்: மத். 13: 16—17

27. செவ்வாய் — நாள் பூசை [ப]
வாசகம்: யாத். 33: 7—11; 34: 5–9, 28
சுவிசேஷம்: மத். 13: 36—43

28. புதன் — நாள்பூசை [ப]
வாசகம்: யாத். 34: 29—35
சுவிசேஷம்: மத். 13: 44—46

29. வியாழன் — புனித மார்த்தாள். [வெ]
வாசகம்: 1கொரி. 7: 25—35
சுவிசேஷம்: அரு. 11: 19—27

30. வெள்ளி — நாள் பூசை [ப]
வாசகம்: லேவி. 23: 1,4-11,15-16,27,34-37
சுவிசேஷம்: மத். 13: 54—58

31. சனி — புனித இஞ்ஞாசியார் [வெ]
வாசகம்: 1கொரி. 10: 31—11: 1
சுவிசேஷம்: மத். 5: 13—16

*சத்தியவேத பாதுகாவலன்*

# பாலியல் அறிவு

பாடசாலைகளில் உயர்தர வகுப்புகளில் படிக்கும் மாணவர்களுக்கு பாலியல் கல்வியை ஊட்ட சுகாதார அமைச்சு திட்டமிட்டு வருவதாக அண்மையில் ஒரு செய்தி வெளிவந்தது. இது குறித்து பலதரப்பட்ட கருத்துக்களும், அபிப்பிராய பேதங்களும் எழலாம். இவையெல்லாம் பாலியல் அறிவு அவசியமா இல்லையா என்பதுபற்றி அல்ல, அது பாடசாலைகளில் இடம்பெறவேண்டுமா? அதில் அடங்கும் விடயங்கள் எவை? விளக்கம் கொடுக்கத் தகுதியுள்ளவர் யார் என்பது பற்றியனவே.

பாலியல் கல்வி என்பதற்கு இரு பொருள்கள் கொள்ளலாம். ஒன்று உடற்கூறு பற்றிய குறுகியபொருள். மற்றது ஒருவரது வாழ்வையே அடக்கும் பரந்த பொருள். இவை இரண்டினுள் ஒன்றை விட்டு மற்றொன்றை எடுத்தால் அது நன்மை பயக்காதது மாத்திரமல்ல, சில சமயம் தீமை விளைப்பதாகவும் இருக்கலாம். ஆகவே பாலியல் கல்வி என்ற இணைப்பெருக்கத்தை மட்டும் எடுத்து விளக்கினால் அது மிகக் குறைபாடுடையதாக இருக்கும்.

உண்மையில் பாலியல் ஒரு நாளில் அல்லது ஒரு பாடத்தில் படிப்பிக்கக் கூடியது அல்ல. குழந்தைப் பருவம் தொட்டு ஆரம்பித்து தொடர்ந்து படிப்படியாக வளர்ந்து வரவேண்டியது. அதாவது நாம் ஆணாகவோ, பெண்ணாகவோ பிறக்கிறோம். ஆண்மையுள்ள ஆணாகவும் பெண்மையுள்ள பெண்ணாகவும் வாழ்வதற்கு ஒரு குழந்தைக்கு உதவி புரியக் கூடியனவெல்லாம்—அதன் உடையலங்காரம், விளையாட்டு, உடற்பயிற்சி முதலிய யாவும் அதன் பாலியல் கல்விக்கு ஓர் ஆரம்பமாகும். இது மேலும் தொடர்ந்து சமூகத்தில் ஒருவர் இருக்க வேண்டிய நிலைக்கு, வகிக்க வேண்டிய பொறுப்புக்களுக்கு தகுந்த முதிர்ச்சி உடையவர்களாக ஆக்குகின்றது. இந்த அடிப்படையில்தான் பாலியல் கல்வி ஊட்டப்பட வேண்டும். அங்ஙனமின்றி வயது வந்ததும் ஒரே மூச்சில் எல்லாவற்றையும் கற்பித்துவிடலாம் என்பது வியர்த்தம்.

உண்மையில் பாலியல் கல்வி குழந்தைகளாயிருக்கும் போதே நாம் சிறுவர், சிறுமியரை நடத்தும் விதத்திலும் அவர்களுக்கு இடும் பெயரிலிருந்தும், அவர்களுக்கு அளிக்கும் விளையாட்டுப் பொருள்களிலிருந்துமே ஆரம்பமாகிறது. இதன் பின் அவர்கள் சந்தர்ப்பமெழும்போது கேட்கும் கேள்விகளுக்குச் சுருக்கமான ஆனால், நேர்மையான விடைகளைக் கொடுப்பதுதான் உத்தமமானது. இவ்விதமாகவே பாலியத்தைக் கடந்து வாலிபத்திற் பிரவேசிக்கும் போதும் அதன் பின்னரும் இந்த வளர்ச்சி தொடர்கின்றது.

இதில் நாம் கவனிக்க வேண்டிய மற்றொரு விஷயம்—பாலியல் அறிவை ஒருவர் ஓர் இடத்திலிருந்து மட்டும் பெற்றுக் கொள்வதில்லை. பெற்றோர் மட்டும்தான் பிள்ளைகளுக்கு அறிவூட்ட வேண்டுமென்பது மிகக் குறுகிய பொருளையுடையதாக இருக்கிறது. வீடு, பாடசாலை, தேவாலயம், எல்லாவிடங்களிலும் பிள்ளைகளும், இளைஞர்களும் பிறரோடு முறையாகப் பழகவும், ஒதுங்கு நோக்கத்தைப் பேணவும் கற்றுக்கொள்கிறார்கள். அது மட்டுமல்ல அவர்கள் கற்கும் ஏனைய பாடங்களும்—உயிரியல், இலக்கியம், சுகாதாரம் அனைத்துமே இதற்கு துணைபுரிகின்றன. அதேபோல வாழ்வில் குறுக்கிடும் சம்பவங்கள்—வீட்டில் ஒரு குழந்தை பிறத்தல், பத்திரிகையில் வாசித்த செய்தி, சினிமாப் படத்தில் கண்ட ஒரு காட்சி—சிறுவர் உள்ளத்தில் கேள்விகளை எழுப்பும். அவற்றிற்கு அவ்வப்போது தக்கவிடை பெறாவிட்டால் திருப்தியடையமாட்டார்கள்.

இன்று உலகம் போகும் போக்கில் அறியாமை யாருக்கும் பாதுகாப்பாக இருக்கப் போவதில்லை. அவர்கள் ஒரு விதத்தில் இல்லாவிட்டால் இன்னொரு விதத்தில் தமது சூழ்நிலையால் பாதிக்கப்படுவது நிச்சயம். அவ்வேளையில் தமது சொந்த அறிவினாலும் திடத்தினாலும் தக்கவிதமாக நடந்துகொள்ளப் போதிய அறிவை அவர்கள் பெறும்படி செய்வது அவசியமாகும்.

# செய்திகள்

### ஜி. சி. ஈ. பரீட்சை விண்ணப்பம்

வருகிற மார்கழி மாதம் நடைபெறவிருக்கும் ஜி. சி. ஈ. சாதாரண பரீட்சைக்குப் பழைய விண்ணப்ப பத்திரத்தில் எவருமே விண்ணப்பிக்க வேண்டாமென்றும், பழைய விண்ணப்ப பத்திரத்தில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் ஏற்கப்பட மாட்டாவென்றும், "எஸ். 2" பொறிக்கப்பட்ட புதிய பத்திரத்திலேயே விண்ணப்பிக்க வேண்டுமென்றும் பரீட்சைப்பகுதி அறிவித்துள்ளது.

### இந்திய கப்பற்சேவை

இந்திய-இலங்கைக் கப்பற் சேவை—அதாவது இராமேஸ்வரம்—தலைமன்னார் கப்பற்சேவை பழைய நேரப்படி மீண்டும் நடைபெறுகின்றது. இராமேஸ்வரத்திலிருந்து கப்பல் திங்கள், வியாழக்கிழமைகளில் தலைமன்னாருக்குப் புறப்படுகிறது. தலைமன்னாரிலிருந்து செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் இராமேஸ்வரத்துக்குப் புறப்படுகிறது.

### புதிய காரியாதிகாரி பிரிவுகள்

தற்போது யாழ்ப்பாண மாவட்டம் 13 காரியாதிகாரி பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது. இவற்றுடன் மேலும் 6 காரியாதிகாரி பிரிவுகளை மேலதிகமாக வகுத்து அவற்றின் தொகையைப் 19 பிரிவுகளாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சிறந்த நிர்வாக சேவை நடைபெறவும், பொது மக்களின் நலன்கருதியுமே இந்த நடவடிக்கையாகும்.

### பூரண சந்திர கிரகணம்

வருகிற ஆவணிமாதம் 6-ந் திகதியன்று இரவு பூரண சந்திரகிரகணமொன்று நிகழவிருக்கிறது. இலங்கையிலே இதனை ஆரம்பமுதல் இறுதிவரை காணலாம். அன்றிரவு 10-23 மணிக்கு ஆரம்பமாகும் இந்தக் கிரகணம் 7 ஆம் திகதியாகிய மறுநாள் அதிகாலை 3-58 மணிக்குப் பூரணமாக நீங்கும். 6 ஆம் திகதி நள்ளிரவிலிருந்து 23 நிமிடங்கள் கழிந்ததும் பூரணகிரகணம் நிகழும்.

### உயர் அதிகாரிகளின் நேரப்பதிவு

தாங்கள் வேலைக்கு வரும் நேரத்தையும், வேலை விட்டுச் செல்லும் நேரத்தையும் அரசாங்கசேவையிலுள்ள கீழ்த்தர ஊழியர்கள் பதிவு செய்வது போல அரசாங்க சேவையிலுள்ள மேல்தர அதிகாரிகளும் பதிவு செய்யவேண்டுமென அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

### ஐந்து வயதாக இருக்கவேண்டும்

பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுமதிக்கும் வயது ஆறாக இருக்கவேண்டுமென்ற அரசாங்கத்தின் தீர்மானத்தை எதிர்த்துத் தொடர்ந்தும் பிள்ளைகளைப் பாடசாலைகளில் சேர்க்கும் வயது ஐந்தாக இருக்கவேண்டுமெனக் கல்வி அமைச்சின் நிரந்தசெயலாளரைக் கேட்கும் பிரேரணை ஒன்று ஸ்ரீலங்கா ஜாதிக குரு சங்கத்தின் வடபிரதேசக் கிளைப் பொதுக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியிருக்கிறது.

### தொடர்ந்து மூன்று தினவிடுமுறை

புதிய விடுமுறைத் திட்டத்தின்படி வருகிற ஆவணிமாதம் 6ஆம் திகதி முதலாவது பௌர்ணமி விடுமுறைத் தினமாகவும், 8ஆம் திகதி முதலாவது ஞாயிறு விடுமுறைத் தினமாகவும் இருக்கும். அத்துடன் 7ஆம் திகதி சனிக்கிழமையும் முழுநாள் விடுமுறையாக இருக்கும்.

### பிறிவிகவுன்சில் அப்பீல்

இலங்கைச் சுப்பிறீங்கோடு அளிக்கும் தீர்ப்பை ஆட்சேபித்து இலங்கையர்கள் லண்டன் நகரிலுள்ள பிறிவிகவுன்சிலுக்கு அப்பீல்செய்வது விரைவிலே நின்றுவிடப்போகிறது. பிறிவி கவுன்சிலுக்குப் பதில் அதுபோலும் சுப்பிறீம் உயர் நீதிமன்றமொன்று இலங்கையிலும் விரைவில் நிறுவப்படவிருக்கிறது. இதற்கான சட்ட அங்கமொன்று சனப்பிரதிநிதிகள் சபையில் பதுவராமல் கொண்டுவரப்படவிருக்கிறது.

### சனி, ஞாயிறு, பௌர்ணமி விடுமுறை நாட்கள்

ஆவணிமாதம் 6ஆம் திகதியிலிருந்து வாரஇறுதி விடுமுறை நாட்களாகச் சனியும் (அரைநாள்) ஞாயிறும் (முழுநாள்) நடைமுறைக்கு வருமிடத்து இவ்வருட இறுதிவரையிலே வாரஇறுதி விடுமுறை நாட்களின் தொகை 32 ஆகும்: ஆவணி 6, புரட்டாசி 4, ஐப்பசி 3, கார்த்திகை 2, மார்கழி 1 ஆகிய திகதிகளில் பௌர்ணமி வருகின்றது. இவற்றிலே புரட்டாசி 4 ஒரு சனிக்கிழமை, ஐப்பசி 3 ஒரு ஞாயிற்றுக்கிழமை, ஆகவே, பௌர்ணமி விடுமுறை நாட்கள் $5 - 1\frac{1}{2} = 3\frac{1}{2}$ மட்டுமே. அதனால் மொத்தவிடுமுறை நாட்கள் $35\frac{1}{2}$ ஆகும்.

### ஆறும் வகுப்பிலிருந்து ஆங்கிலம்

தற்போது பாடசாலைகளில் மூன்றும் வகுப்பிலிருந்து ஆங்கிலம் கற்பிக்கப்பட்டு வருகிறது. ஆனால், வருகிற தை மாத முதல் ஆறும் வகுப்பிலிருந்தே ஆங்கிலம் ஒருபாடமாகக் கற்பிக்கப்படும். ஆறும் வகுப்பிலிருந்து கற்பிக்கப்படும் ஆங்கிலக் கல்வியில் தேர்ச்சியடையும் மாணவர்களுக்கு மட்டுமே ஆங்கிலத்தை மேலும் தொடர்ந்து ஒரு பாடமாகக் கற்பிக்கக் கல்வி அமைச்சு திட்டமிட்டிருக்கிறது. ஆனால், அவர்களின் தெரிவை எந்த வகுப்பிலே எவ்வாறு நடத்துவது என்பது பற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லையாம்.

### குருநகரில் புதியவீடுகள்

குருநகரில் பீச்றோட்டுக்கும், றெக்ளமேசன் வீதிக்கும் இடையிலுள்ள இரண்டு ஏக்கர்நிலத்திலே ஐந்துலட்சம் ரூபா செலவில் புதிய வீடமைப்புத் திட்டம் ஒன்று அமைக்கப்படவிருக்கிறது. ஒவ்வொன்றும் 7,500 ரூபா செலவில் 68 வீடுகள் அமைக்கப்பட்டுக் குறைந்த வருவாயுள்ள குடும்பங்களுக்கே வாடகைக்குக் கொடுக்கப்படும். கட்டடவேலைகள் இம்மாத இறுதியில் ஆரம்பமாகுமென்றும், வருகிற ஐப்பசி மாதம் அவற்றிலே குடும்பங்கள் குடியேற்றி வைக்கப்படுமென்றும் தெரியவருகிறது.

### முத்துக்குளிப்பு ஆராய்ச்சி

மன்னாரைச் சேர்ந்த சிலாபத்துறைக் கடலிலே அடுத்த வருடம் நடத்துவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ள முத்துக்குளிப்புக்கான ஆராய்ச்சியைக் கடற்தொழில் பகுதி விரைவிலே நடத்தவிருக்கிறது. முத்துக்களின் தன்மை, அளவு, விளைவு, முத்துக்குளிப்புக்கான கால எல்லை, பாவிக்கப்படும் சாதனங்கள் ஆகியன இந்த ஆராய்ச்சிவாயிலாக அறியப்படுமெனத் தெரியவருகிறது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20ஆம் இலக்க 5-ம் குறுச்சுத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஆடி மாதம் 24-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக்பிறஸ்," யாழ்ப்பாணம்; தொலைபேசி: 300; தாபிதம்: 1876.